நகராட்சி அலுவலகம்,
சத்தியமங்கலம்.
நாள் :27.04.2020

2020-ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் 30-ஆம் தேதி வியாழக்கிழமை காலை 11.00 மணிக்கு நகர்மன்றக் கூடத்தில் சாதாரணக் கூட்டம் நடைபெறும். அதற்கான பொருட்களின் விபரப்பட்டியல் இத்துடன் இணைக்கப்பட்டுள்ளது.

தனி அலுவலர் மற்றும் ஆணையாளர்,
சத்தியமங்கலம் நகராட்சி.

## பொருட்களின் விபரப்பட்டியல்

**பொருள் : 1**

இந்நகராட்சியின் ஆணையாளர் அவர்களின் மார்ச் 2020ஆம் மாத நாட்குறிப்பு மன்றத்தின் பார்வைக்கும் பதிவிற்கும் வைக்கப்படுகிறது.

அலுவலகக் குறிப்பு : மன்றம் பதிவு செய்யலாம்.
(கட்டு எண்.1813/2017/சி1)

தீர்மானம் எண் : 335 பதிவு செய்யப்பட்டது.

**பொருள் : 2**

இந்நகராட்சியின் நகராட்சி பொறியாளர் அவர்களின் மார்ச் 2020ஆம் மாத நாட்குறிப்பு மன்றத்தின் பார்வைக்கும் பதிவிற்கும் வைக்கப்படுகிறது.

அலுவலகக் குறிப்பு : மன்றம் பதிவு செய்யலாம். (கட்டு எண்.1813/2017/சி1)

தீர்மானம் எண் : 336 பதிவு செய்யப்பட்டது.

**பொருள் : 3**

நகராட்சி நிர்வாக ஆணையர் - சென்னை -28 அவர்களின் கடிதம் எண் 5437/J2/2020-8 நாள்.31.03.2020–ல் தெரிவித்துள்ளபடி, சத்தியமங்கலம் நகராட்சி COVID-19 தடுப்பு முன்னெச்சரிக்கை நடவடிக்கைகள் மேற்கொள்ளும் விதமாக தனிமைப்படுத்தப்பட்ட பகுதிகள் மற்றும் தனிமைப்படுத்தப்படாத பகுதிகளில் பயன்படுத்திய முகக்கவசங்கள், கையுறைகள், PPE கவசங்களை தனியே மஞ்சள் உறையில் சேகரித்து, அதை தமிழ்நாடு மாசுக்கட்டுப்பாட்டு வாரியத்தால் அங்கீகரிக்கப்பட்ட Bio-Medical Waste – களை கையாளும் Ramkey Agency–Salem அவர்களின் மூலம் பாதுகாப்பாக கையாளவும், அதற்கான கட்டணங்களை செலுத்த உத்தேச செலவினம் ரூபாய்.1,50,000/- (ஒரு லட்சத்து ஐம்பதாயிரம் மட்டும்) நகர்மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலக குறிப்பு:** பொது சுகாதார நலன் கருதி நகர்மன்றம் அனுமதிக்கலாம்.
(ந. க. எண். 360/2020/எச்-1)

தீர்மானம் எண் : 337 அனுமதிக்கப்பட்டது.

**பொருள் : 4**

நகராட்சி நிர்வாக ஆணையர், சென்னை அவர்களின் செயல்முறை ஆணை ந. க. எண். 18812/2017/MCA4 நாள். 24.03.2020- ன்படி Covid -19 வைரஸ் பரலை முன்னிட்டு அம்மா உணவகத்தில் ஆதரவற்றவர்கள், முதியவர்கள் மற்றும் ஏழை எளிய மக்களுக்கு சூடான உணவு தயாரித்து வழங்க கோரி நிதி ஒதுக்கீடு ரூ.2.00 லடசம் வழங்கப்பட்டுள்ளது.

மேற்படி உணவு தயாரித்து வழங்க போதிய பாத்திரங்கள் அம்மா உணவகத்தில் இல்லாத காரணத்தால் கூடுதல் பாத்திரங்கள் அரசாணை எண்.நிதி (ஊதிய) துறை செயலகம், சென்னை கடிதம் எண். 74/JS (MA)/2020, நாள். 01.04.2020-ன்படி உள்ளூர் கடைகளில் வாங்க மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

அலுவலகக்குறிப்பு : மேற்கண்ட அரசாணையின் அறிவுரைக்கிணங்க மேற்கண்ட அத்தியாவசிய பாத்திரங்கள் உள்ளூர் கடையில் முன் அனுமதி பெற்று வாங்க மன்றம் அனுமதி அளிக்கலாம்.

தீர்மானம் எண் : 338 அனுமதிக்கப்பட்டது.

பொருள் : 5

சத்தியமங்கலம் நகராட்சிக்கு சொந்தமான கீழ்க்கண்ட கடை இனங்கள் வரும் 30.01.2020, 29.02.2020, 30.03.2020 மற்றும் 31.04.2020 உடன் உரிமக்காலம் முடிவடைவதால் அரசாணை எண். ( நிலை) 92, நகராட்சி நிர்வாக மற்றும் குடிநீர் வழங்கல் துறை ( ந.நி.4) குறித்து விருப்ப படிவம் பெறப்பட்டது. அதன்படி உரிமக்கட்டணம் மற்றும் 12 மாத வாடகை வித்தியாச முன் வைப்புத் தொகைகள் பெறப்பட்டது. எனவே அரசாணை எண். 92ன்படி நிபந்தனைகளுக்குட்பட்டு மேலும் உரிமம் காலம் முடிவடையும் தேதியிலிருந்து மூன்றாண்டு காலத்திற்கு நீடிப்பு செய்து வழங்க மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

| இனம் | கடை எண் | வரிவிதிப்பு எண் | கடை ஏல உரிமதாரர் பெயர் | பழைய மாத வாடகை ரூ. | 15 % உயர்வு செய்த பின் மாத வாடகை ரூ. | நீடிப்பு செய்து வழங்கும் உரிமம் காலம் |
|---|---|---|---|---|---|---|
| வாரச்சந்தை வணிக வளாகம் | 30 | 061/4130 | B. மாதேஷ் | 6600 | 7590 | 01.04.2020 முதல் 31.03.2023 வரை |
| வாரச்சந்தை வணிக வளாகம் | 34 | 061/4135 | N. ரவிசங்கர் | 6600 | 7590 | 01.02.2020 முதல் 31.01.2023 வரை |
| கோட்டு வீராம்பாளையம் திருவள்ளுவர் திடல் | 1 | 061/4401 | T.T. மாரிமுத்து | 3650 | 4198 | 01.04.2020 முதல் 31.03.2023 வரை |
| கோட்டு வீராம்பாளையம் திருவள்ளுவர் திடல் | 2 | 061/4402 | R. வசந்தகுமார் | 3650 | 4198 | 01.04.2020 முதல் 31.03.2023 வரை |
| கோட்டு வீராம்பாளையம் திருவள்ளுவர் திடல் | 3 | 061/4403 | S.C. சத்யமூர்த்தி | 3500 | 4025 | 01.03.2020 முதல் 28.02.2023 வரை |
| கோட்டு வீராம்பாளையம் திருவள்ளுவர் திடல் | 4 | 061/4405 | S.C. சத்யமூர்த்தி | 3500 | 4025 | 01.03.2020 முதல் 28.02.2023 வரை |
| கோட்டு வீராம்பாளையம் திருவள்ளுவர் திடல் | 5 | 061/4406 | V. சிந்துஜா | 3500 | 4025 | 01.03.2020 முதல் 28.02.2023 வரை |
| கோட்டு வீராம்பாளையம் திருவள்ளுவர் திடல் | 6 | 061/4407 | V. சிவானந்தன் | 3500 | 4025 | 01.04.2020 முதல் 31.03.2023 வரை |
| கோட்டு வீராம்பாளையம் திருவள்ளுவர் திடல் | 7 | 061/4408 | V. சிவானந்தன் | 3500 | 4025 | 01.04.2020 முதல் 31.03.2023 வரை |
| கோட்டு வீராம்பாளையம் திருவள்ளுவர் திடல் | 8 | 061/4409 | V. யசோதா | 3500 | 4025 | 01.04.2020 முதல் 31.03.2023 வரை |

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| கோட்டு வீராம்பாளையம் திருவள்ளுவர் திடல் | 9 | 061/4410 | K. சசி | 3500 | 4025 | 01.04.2020 முதல் 28.02.2023 வரை |
| நிர்மலா தியேட்டர் எதிர்புறம் உள்ள கடை | 1 | 061/4451 | A. முகமதுஅனீபா | 4100 | 4715 | 01.05.2020 முதல் 30.04.2023 வரை |
| நிர்மலா தியேட்டர் எதிர்புறம் உள்ள கடை | 2 | 061/4452 | A. முகமதுஅனீபா | 3600 | 4140 | 01.05.2020 முதல் 30.04.2023 வரை |

அலுவலகக்குறிப்பு : மேற்கண்ட கடை இனங்களுக்கு 30.01.2020, 29.02.2020, 30.03.2020 மற்றும் 31.04.2020 உடன் முடிவடைவதையொட்டி மேலும் அரசாணை எண்.92-ன்படி உரிய உரிமக்கட்டணம் மற்றும்12 மாத வாடகை வித்தியாச முன்வைப்புத் தொகைகள் பெறப்பட்டது. எனவே, மேற்கண்ட கடைகளுக்கு அரசாணை எண். 92-ன்படி நிபந்தனைகளுக்குட்பட்டு மேற்காணும் பட்டியலின்படி மூன்றாண்டு காலத்திற்கு உரிமம் நீட்டிப்பு செய்து மன்றம் அனுமதி வழங்கலாம்.

(ந. க. எண். 3800/2016/அ3)

தீர்மானம் எண் : 339 அனுமதிக்கப்பட்டது.

பொருள் : 6

சத்தியமங்கலம் நகராட்சிக்கு சொந்தமான புதிய பேருந்து நிலையத்தில் (1) பேருந்து கட்டண வசூல் செய்யும் உரிமம் வரும் 30.07.2020 உடன் முடிவடைகிறது. மேலும் (2) புதிய பேருந்து நிலையத்தில் கட்டண கழிப்பிடம் வசூல் செய்யும் உரிமம் வரும் 31.08.2020 உடன் முடிவடைவதாலும் மேற்கண்ட ஒரு வருட குத்தகை உரிமம் அரசாணை எண். 181ன்படி புதிய இனமாக 01.08.2020 மற்றும் 01.09.2020 முதல் மூன்றாண்டு காலத்திற்கு பொது ஏலம் மற்றும் ஒப்பந்துபுள்ளிகள் ஏல நிபந்தனைகளின்படி கோர மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

1. புதிய பேருந்து நிலையத்தில் பேருந்து வாகன கட்டண வசூல் செய்யம் உரிமம் 30.07.2020 மற்றும் (2) பதிய பேருந்து நிலையத்தில் கட்டண கழப்பிடம் வசூல் செய்யும் உரிமம் 30.08.2020 உடன் முடிவடைவதாலும் அரசாணை எண். 181 ன்படி புதிய இனமாக 01.08.2020, 01.09.2020 முதல் ஒப்படைக்கும் நாள் முதல் மூன்றாண்டு காலத்திற்கு பொது ஏலம் மற்றும் ஒப்பந்தப்புள்ளி கோருவதற்கு மன்றம் அனுமதிக்கலாம்.
2. 2018-2019 முதல் 2020-2021 ஆம் ஆண்டு பொது ஏல நிபந்தனைகளின்படியும், பொது மக்கள் அறியும் வண்ணம் ஆட்டோ மற்றும் தினசரி நாளிதழில் விளம்பரத்திற்கான உத்தேச செலவினம் ரூ. 30,000-ஐ பொது நிதி மூலம் மேற்கொள்வதற்கும் மன்றம் அனுமதிக்கலாம்.
3. அவசர அவசியம் கருதி நகர் மன்றத்தின் முன் அனுமதி பெற்று ஒப்பந்தப்புள்ளி மற்றும் ஏல நடவடிக்கை மேற்கொள்ளவும் மன்றம் அனுமதிக்கலாம்.

( ந. க. எண். 3800/2016/அ3)

தீர்மானம் எண் : 340 அனுமதிக்கப்பட்டது.

பொருள் : 7

சத்தியமங்கலம் நகராட்சிக்குட்பட்ட பகுதிகளில் குடிநீர் விநியோகம் செய்யப்படும் குடிநீர் ஈரோட்டில் உள்ள தமிழ்நாடு குடிநீர் மற்றும் வடிகால் வாரியத்திற்கு சொந்தமான ஆய்வகத்திற்கு குடிநீர் மாதிரிகள் எடுத்து சென்று ஆய்வு செய்வது அவசியம் ஆகும். மாதந்தோறும் ஆய்வு கட்டணம் வாரியத்திற்கு செலுத்த வேண்டும். இதற்கு உத்தேசமாக ரூ.1.00 இலட்சம் செலவு ஆகும். இச்செலவினத்தை குடிநீர் நிதியில் மேற்கொள்ள நகர் மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது .

அலுவலக குறிப்பு :-

1. மன்றம் அனுமதிக்கலாம்.
2. மேற்காணும் செலவினத்தை 2020-2021 ஆம் ஆண்டு குடிநீர் நிதியில் மேற்கொள்ளவும், வரவு செலவு திட்டத்தில் சேர்க்க மன்றம் அனுமதிக்கலாம்.

(கட்டு எண்.3543/2012/இ1)

தீர்மானம் எண் : 341 அனுமதிக்கப்பட்டது.

பொருள் : 8

சத்தியமங்கலம் நகராட்சியின் பொது சுகாதாரப்பிரிவில் திடக்கழிவுகள் சேகரம் செய்யும் பணிக்கு பயன்படுத்தப்படும் TATA ACE வாகனம் எண் TN 36 AQ 1618 என்ற வாகனத்திற்கு 2020-2021 ஆம் ஆண்டிற்கு தகுதிச்சான்று பெற கீழ்க்கண்டவாறு பராமரிப்புப்பணிகள் செய்யப்பட வேண்டியுள்ளது

1. கம்பிளீட் இரண்டு கோட் பெயிண்டிங், வாட்டர் சர்வீஸ், எண்கள், எழுத்துகள், F.C.ஸ்டிக்கர் ஒட்டுதல்
2. கம்பிளீட் இன்ஜின், கியர் பாக்ஸ், கிரவுன் ஆயில் சர்வீஸ் செய்து, ஆயில் பில்டர், டீசல் பில்டர் மாற்றுதல், ஏர்பில்டர் புதியது மாற்றுதல் (ஆயில் நகராட்சி சப்ளை)
3. கியர் பாக்ஸ் கழற்றி கிளட்ச் பிளேட், கவர் அசம்புலி, ரிலீசர் பேரிங் புதியது மாற்றுதல்
4. இன்ஜின் ஹெட் பிரித்து , ஹெட் வால்வு, சீட்டிங் செய்து ஹெட் மட்டம் சர்பேசிங் செய்து கேஸ்-கட் புதியது மாற்றியது.
5. ரேடியேட்டர் அசம்புலி புதியது மாற்றுதல்
6. கியர் பாக்ஸ் டாப் 1 No, சிறிய என்டு பால் 2 No's, பெரிய என்டு பால் 1No. புதியது.
7. புதிய பேட்டரி 1 No. (பழைய பேட்டரி கழித்து)
8. பாடி பின்புறம் பிளாட்பாம் இத்துப் போனதை எடுத்துவிட்டு புதிய தகரம் போட்டு வெல்டிங் செய்தல், பேக் இரண்டு டோர் டிங்கரிங், வெல்டிங் செய்து டோர் சீட்டிங் செய்தல்
9. செல்ப் மோட்டார் டைனமோ சர்வீஸ் செய்தல்
10. கம்பிளீட் எலக்ட்ரிக்கல் செக்கப் செய்து பழுதடைந்த பல்பு மாற்றுதல்
11. நான்கு வீல் கிரீஸ், ஆயில் சீல், லாக் வாசர் பழுதடைந்த பேரிங், லைனிங் மாற்றுதல்

மேற்படி பணியினை செய்ய உத்தேச செலவினம் ரூ.99,700/- க்கு நகர்மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலக குறிப்பு:-** பொது சுகாதார வாகனத்திற்கு தகுதிச்சான்று பெற வேண்டியுள்ளதால் நகர்மன்றம் அங்கீகரிக்கலாம்.

(ந.க.எண். 0442 / 2020 / எச்-1)

தீர்மானம் எண் : 342 அனுமதிக்கப்பட்டது.

பொருள் : 9

சத்தியமங்கலம் நகராட்சியின் பொது சுகாதாரப்பிரிவில் திடக்கழிவுகள் சேகரம் செய்யும் பணிக்கு பயன்படுத்தப்படும் TATA ACE வாகனம் எண் TN 36 AQ 1606 என்ற வாகனத்திற்கு 2020-2021 ஆம் ஆண்டிற்கு தகுதிச்சான்று பெற கீழ்க்கண்டவாறு பராமரிப்புப்பணிகள் செய்யப்பட வேண்டியுள்ளது

1. கம்பிளீட் இரண்டு கோட் பெயிண்டிங், வாட்டர் சர்வீஸ், எண்கள், எழுத்துகள் எழுதுதல் மற்றும் F.C.ஸ்டிக்கர் ஒட்டுதல்
2. நான்கு வீல் கிரீஸ், ஆயில் சீல், லாக் வாசர், பழுதடைந்த பேரிங், லைனிங் மாற்றுதல்
3. கம்பிளீட் இன்ஜின், கியர் பாக்ஸ், கிரவுன் ஆயில் சர்வீஸ் செய்து, ஆயில் பில்டர், டீசல் பில்டர் மாற்றுதல் (ஆயில் நகராட்சி சப்ளை), ஏர்பில்டர் புதியது.
4. கியர் ராடு புஷ்-கிட் புதியது மாற்றுதல்
5. கியர் பாக்ஸ் கழற்றி கிளட்ச் பிளேட், கவர் அசம்புலி, ரிலீசர் பேரிங் புதியது மாற்றுதல்
6. செல்ப் மோட்டார் டைனமோ சர்வீஸ் செய்தல்
7. பாடி பின்புறம் பிளாட்பாம் இத்துப் போனதை எடுத்துவிட்டு புதிய தகரம் போட்டு வெல்டிங் செய்தல், பேக் இரண்டு டோர் டிங்கரிங், வெல்டிங் செய்து டோர் சீட்டிங் செய்தல்
8. ரேடியேட்டர் ஒவராலிங் செய்து ஓஸ் மாற்றுதல்
9. ஜாயிண்ட் பெண்டு செக்கப் செய்து புதிய ஸ்டார் மாற்றுதல்
10. கம்பிளீட் எலக்ட்ரிக்கல் செக்கப் செய்து பழுதடைந்த பல்பு மாற்றுதல்
11. கியர் பாக்ஸ் டாப் 1 No, என்டு பால் சிறியது 2 No's, பெரியது 1No. புதியது.
12. எக்ஸ்லேட்டர் கேபிள், கிளட்ச் கேபிள் புதியது மாற்றுதல்

மேற்படி பணியினை செய்ய உத்தேச செலவினம் ரூ.86,000/-க்கு நகர்மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலக குறிப்பு:-** பொது சுகாதார வாகனத்திற்கு தகுதிச்சான்று பெற வேண்டியுள்ளதால் நகர்மன்றம் அங்கீகரிக்கலாம்.

(ந.க.எண். 0442 / 2020 / எச்-1)

தீர்மானம் எண் : 343 அனுமதிக்கப்பட்டது

பொருள் : 10

சத்தியமங்கலம் நகராட்சியில் ரங்கசமுத்திரம் மற்றும் கோம்புபள்ளம் ஆகிய இரண்டு குடிநீர் தலைமை நீரேற்றும் நிலையங்களிலும் ஆற்று நீரை சுத்தம் செய்ய பயன்படுத்தப்படும் (ALUM) படிகாரம் தற்போது குறைந்த அளவே இருப்பில் உள்ளது. எனவே,மேலும்,இரண்டு குடிநீர் தலைமை நிலையங்களுக்கும் சேர்த்து பத்து ஆயிரம் கிலோ (10.00 மெ.டன்) அளவு படிகாரம் வாங்க தலைமை நிலைய பணியாளர்கள் தனது கடிதத்தில் தெரிவித்துள்ளார்கள். உத்தேச செலவின தொகை ரூ.1.50 இலட்சம் ஆகும். இச்செலவினம் நகராட்சியின் குடிநீர் நிதியில் மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

**அலுவலகக் குறிப்பு:**

1) மன்றம் அனுமதிக்கலாம்.
2) இச்செலவினத்தை நகராட்சியின் குடிநீர் நிதியில் மேற்கொள்ளலாம், 2020-2021 ஆம் ஆண்டு திருத்திய வரவு-செலவு திட்டத்தில் சேர்த்து கொள்ளலாம்.

(கட்டு எண்.2321/2017/இ1)

தீர்மானம் எண் : 344 அனுமதிக்கப்பட்டது

பொருள் : 11

சத்தியமங்கலம் நகராட்சி பகுதியில் தூய்மை இந்தியா திட்டத்தின் கீழ் தற்பொழுது வீடு வீடாக சென்று குப்பைகளை மக்கும் மற்றும் மக்காத குப்பைகளாக பிரித்து முதன்மை சேகரம் செய்யப்பட்டு நகராட்சி குப்பை கிடங்கில் வைத்து உரம் தயாரிக்கப்பட்டு வருகிறது. சென்னை நகராட்சி நிர்வாக ஆணையர் அவர்களின் ஆய்வு கூட்டத்தில் நகராட்சி முழுவதும் டம்பர் பின்கள் மற்றும் டம்பர் பிளாசர் பயன்படுத்த கூடாது என்று அறிவுரைகள் வழங்கப்பட்டது. மேலும், டம்பர் பிளாசரை (Dumber Placer) வேறு பயன்பாட்டிற்கு மாற்றி கொள்ளவும் தெரிவித்துள்ளார்கள். எனவே, இந்நகராட்சியில் பயன்படுத்தப்பட்டு வரும் வாகனத்தினை குடிநீர் டேங்கர் லாரியாக மாற்றம் செய்ய நகர் மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது. மேலும், இதற்கு செலவு ரூ.9.30 இலட்சம் ஆகும். இச்செலவினத்தினை நகராட்சியின் குடிநீர் நிதியில் மேற்கொள்ளவும் நகர் மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

**அலுவலகக்குறிப்பு:**

1)மன்றம் அனுமதிக்கலாம்.
2இச்செலவினம் நகராட்சியின் குடிநீர் நிதியில் மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம், 2020-2021 ஆம் ஆண்டு வரவு-செலவு திட்டத்தில் சேர்த்து கொள்ளலாம்.

(கட்டு எண். 100/2016/இ1)

தீர்மானம் எண் : 345 அனுமதிக்கப்பட்டது.

பொருள் : 12

சத்தியமங்கலம் நகராட்சி பகுதிக்குட்பட்ட ரங்கசமுத்திரம் மற்றும் கோம்புபள்ளம் தலைமை நீரேற்று நிலையங்களிலும் பாதுகாக்கப்பட்ட பொதுமக்களுக்கு குடிநீர் வழங்க ஏதுவாக திரவநிலை குளோரின் வாயு 900 கி.கி. அளவுள்ள நிரப்பப்பட்ட 16 எண்ணிக்கைகள் (இதில் ரங்கசமுத்திரம் மற்றும் கோம்புபள்ளம் தலைமை நீரேற்று நிலையத்திற்கும்) தேவைப்படுகிறது. மேலும், நடப்பு ஆண்டிற்கு (2020-2021) கொள்முதல் செய்ய உத்தேச செலவினம் தொகை ரூ.3.80 இலட்சம் ஆகும். இச்செலவினம் நகராட்சியின் குடிநீர் நிதியில் மேற்கொள்ள நகர் மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

**அலுவலகக்குறிப்பு :**

1)மன்றம் அனுமதிக்கலாம்
2) இச்செலவினம் நகராட்சியின் குடிநீர் நிதியில் மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம், 2020-2021 ஆம் ஆண்டு வரவு-செலவு திட்டத்தில் சேர்த்து கொள்ளலாம்.

(கட்டு எண். 337/2018/இ1)

தீர்மானம் எண் : 346 அனுமதிக்கப்பட்டது.

பொருள் : 13

சத்தியமங்கலம் நகராட்சிக்கு சொந்தமான ஈப்பு வாகனம் எண்.TN 36 X8111 மற்றும் TN 36 AX 0783-க்கு 2020-2021 ஆம் ஆண்டு (27.06.2020 முதல் 26.06.2021) (06.06.2020 முதல் 05.06.2021) வரை உள்ள காலத்திற்கு வாகனம் காப்பீடு புதுப்பிக்க உத்தேசமாக ரூ.31000-/-ஐ United India Insurance Company LTD நிறுவனத்திற்கு தொகை செலுத்த மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

அலுவலகக் குறிப்பு:

1. மன்றம் அனுமதிக்கலாம்.
2. இச்செலவினத்தை நகராட்சி வருவாய் நிதியில் மேற்கொள்ளவும், 2020-2021 ஆம் ஆண்டு திருத்திய மதிப்பீட்டில் சேர்த்துகொள்ள மன்றம் அனுமதி வழங்கலாம்.

(கட்டு எண். 430/2019/இ1)

தீர்மானம் எண் : 347 அனுமதிக்கப்பட்டது.

பொருள் : 14

சத்தியமங்கலம் நகராட்சியின் பொது சுகாதாரப்பிரிவில் கழிவுநீர் அகற்றும் பணிக்கு பயன்படுத்தப்படும் வாகனம் எண் TN 36 Z 3643 கொண்ட வாகனத்திற்கு காப்பீடு காலம் 06.05.2020 ம் நள்ளிரவுடன் முடிவடைகின்றது எனவே மீண்டும் 05.05.2020 நள்ளிரவு முதல் 04.05.2021 நள்ளிரவு முடிய ஓராண்டு காலத்திற்கு புதுப்பித்துக்கொள்ள உத்தேச செலவினம் ரூ 18,610/-த்திற்கு நகர்மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலக குறிப்பு: நகர்மன்றம் அங்கீகரிக்கலாம்.

(ந.க.எண். 0444/எச்-1/2020)

தீர்மானம் எண் : 348 அனுமதிக்கப்பட்டது.

பொருள் : 15

சத்தியமங்கலம் நகராட்சியின் பொது சுகாதாரப்பிரிவில் டிராக்டர் பணிக்கு பயன்படுத்தப்படும் வாகனம் எண். TN 36 Y 6881கொண்ட வாகனத்திற்கு காப்பீடு காலம் 31.05.2020 ம் நள்ளிரவுடன் முடிவடைகின்றது எனவே மீண்டும் 05.05.2020 நள்ளிரவு முதல் 04.05.2021 நள்ளிரவு முடிய ஓராண்டு காலத்திற்கு புதுப்பித்துக்கொள்ள உத்தேச செலவினம் ரூ 12,224/-த்திற்கு நகர்மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலக குறிப்பு:

1. நகர்மன்றம் அங்கீகரிக்கலாம்.

(ந.க.எண். 0441/எச்-1/2020)

தீர்மானம் எண் : 349 அனுமதிக்கப்பட்டது.

பொருள் : 16

நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை அரசாணை (D) எண். 141 (G.O.(D)No.141) நாள்.23.04.2020-ல் கொரோனா வைரஸ் (Corona Virus) (கோவிட் - 19) பரவலைத் தொடர்ந்து 144 தடை உத்திரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது. உள்ளாட்சி அமைப்புகளுக்கு பொது மக்களால் செலுத்தப்பட வேண்டிய சொத்துவரி, குடிநீர் கட்டணம் போன்றவை அச்சம் மற்றும் அருவருக்கத்தக்க இன கட்டணங்கள் போன்றவை செலுத்துவதற்கான கால அவகாசம் 3 மாதங்களுக்கு (30.06.2020 வரை) நீடித்து வெளியிடப்பட்ட அரசாணை மன்றத்தின் பார்வைக்கும் பதிவிற்கும் வைக்கப்படுகிறது.
அலுவலக குறிப்பு : மன்றம் பதிவு செய்யலாம்.

(ந. க. எண். 865/2019/அ1)

தீர்மானம் எண் : 350 அனுமதிக்கப்பட்டது.

பொருள் : 17

சத்தியமங்கலம் நகராட்சிப் பொது சுகாதாரம் - COVID - 19 தடுப்பு நடவடிக்கைகள் மேற்கொள்ளும் விதமாக பொது இடங்களில் முககவசம் அணியாமல் இருப்பவர்களிடம் ரூபாய் 100/- மட்டும் தலா அபராதம் விதிக்க அபராத ரசீது புத்தங்கள் (நூறு ரசீதுகள் உடைய) ஐம்பது எண்ணிக்கைகள் அச்சடிக்க வேண்டியும்,அதற்கான உத்தேச செலவினம் ரூ.9000/-க்கு நகர்மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலக குறிப்பு: -**

1. தல அபராதம் விதிக்க நகர்மன்றம் அங்கீகரிக்கலாம்.

2. தல அபராத ரசீது புத்தகங்கள் அச்சடிக்க நகர்மன்றம் அனுமதிக்கலாம்.

**(ந.க. எண். 360/2020/எச்.1)**

தீர்மானம் எண் : 351 அனுமதிக்கப்பட்டது.

பொருள் : 18

சத்தியமங்கலம் நகராட்சிக்கு சொந்தமான புதிய பேருந்து நிலைய கடை ஆவின் பால்பூத் திருமதி. ஆர். ராதிகா என்பவரால் 01.04.2018 முதல் கடை நடத்தி வரப்பட்டது. தற்போது கடைகாரர் உடல் நிலை சரியில்லாத காரணத்தால் இவருடைய பங்குதாரர் திரு. பி. ஈஸ்வரமூர்த்தி என்பவருக்கு கடையினை அரசாணை எண். 92 ன்படி பெயர் மாற்றம் செய்து கொள்ள 04.03.2020-இல் இசைவு கடிதம் வழங்கியுள்ளார். அரசாணை எண். 92 -இன் நிபந்தனைகளின்படி உரிய கட்டணம் பெறப்பட்டுள்ளது. எனவே பெயர் மாற்றம் செய்ய மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

அலுவலகக்குறிப்பு :

மேற்கண்ட புதிய பேருந்து நிலைய கடை ஆவின்பால் பூத்-ஐ திருமதி. ஆர். ராதிகா என்பவரால் கடை நடத்தி வரப்பட்டு தற்போது அவரது உடல் நிலையை கருத்தில் கொண்டு அவரின் பங்குதாரர் திரு. பி. ஈஸ்வரமூர்த்தி என்பவருக்கு அரசாணை எண். 92-இன்படி மாற்றம் செய்து வழங்கக் கோரி வரப்பெற்ற இசைவுக் கடிதத்தின்படி அரசாணை எண். 92-இல் அனுமதியற்ற அனுபோகதாரர்களின் நேர்வில் ஒருமுறை மட்டும் அளிக்கப்படும் சலுகை அடிப்படையில் குத்தகை உரிமையை அவர்களுடைய பெயரில் மாற்றித்தரலாம். இதற்கான விண்ணப்பதாரர் 12 மாதங்களுக்குரிய மாதாந்திர குத்தகைத் தொகைக்கு சமமான தொகையை முன்பணமாக செலுத்த வேண்டும். இது தவிர 12 மாத வாடகைக்கு சமமான தொகையை பெயர் மாற்றக் கட்டணமாக அவர் செலுத்த வேண்டும் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது. அதன்படி திரு.பி.ஈஸ்வரமூர்த்தி என்பவர் மனுவுடன் பெயர் மாற்றத்திற்கான நோட்டரி பாப்ளிக் வழக்கறிஞரிடம் உரிய உறுதிமொழி பத்திரத்துடன் விண்ணப்பம் சமர்ப்பிக்கப்பட்டு அதனடிப்படையில் அரசாணையில் தெரிவிக்கப்பட்டவாறு 12 மாத வாடகையை முன்பணமாக ரூ. 90,000/- நகராட்சி கருவூலக சலான் எண். 21923 நாள். 04.03.2020 ஏல வைப்புத்தொகை ரூ.50,000/- சலான் எண். 21922 நாள். 04.03.2020 மற்றும் பெயர் மாற்றக் கட்டணமாக ரூ.90,000/- சலான் எண். 21924 நாள்.04.03.2020 செலுத்தப்பட்டுள்ளது. எனவே நிபந்தனைகளின்படி செலுத்தப்பட்டுள்ளதால் திரு. பி. ஈஸ்வரமூர்த்தி, த/பெ. பழனிச்சாமி என்பவர் பெயருக்கு பெயர் மாற்றம் செய்து மன்றம் அனுமதி வழங்கலாம்.

(ந. க. எண். 3800/2016/அ3)

தீர்மானம் எண் : 352 அனுமதிக்கப்பட்டது.

பொருள் : 19

சத்தியமங்கலம் நகராட்சி பொறியியல் பிரிவில் பயன்படுத்தப்பட்டு வரும் குடிநீர் டேங்கர் லாரி எண். TN 36Y 0200 வரும் 17.03.2020 அன்று உடன் வருடாந்திர தகுதிக்கான் பருவம் (Fitness Certificate ) முடிவு வருவதை யொட்டி குடிநீர் டேங்கர் லாரி முற்றிலும் பழுதுகள் ஏற்பட்டு வாகனம் ஓட்ட முடியாத நிலையில் உள்ளதாக திரு.எஸ்.கே.பழனிசாமி,குடிநீர் டேங்கர் லாரி ஓட்டுநர் அவர்களின் விண்ணப்பத்தில் தெரிவித்துள்ளார்கள். குடிநீர் டேங்கர் லாரி மூலம் வெளிப்புற கிராம பகுதிகளுக்கு தினசரி குடிநீர் விநியோகம் செய்யப்பட்டு வருகிறது.இப்பணிகள் முற்றிலும் பாதிக்கப்பட உள்ளது. பொதுமக்களின் குடிநீர் தேவைகள் பூர்த்தி செய்யும் பொருட்டு தனியார் குடிநீர் டேங்கர் லாரிகள் மூலம் வாடகை அடிப்படையில் தினசரி ஊரக பகுதிகளுக்கு குடிநீர் விநியோகம் செய்யவும் இதற்கு ஆகும் செலவு ரூ.3.00 இலட்சம் ஆகும்.இச்செலவினம் நகராட்சியின் குடிநீர் நிதியில் மேற்கொள்ள நகர் மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

அலுவலக குறிப்பு:-

1)மன்றம் அனுமதிக்கலாம்

2) இச்செலவினம் நகராட்சியின் குடிநீர் நிதியில் மேற்கொள்ளவும் , 2020-2021-ஆம் ஆண்டு திருத்திய வரவு- செலவு மதிப்பீட்டில் சேர்த்து கொள்ளலாம்.

தீர்மானம் எண் : 353 அனுமதிக்கப்பட்டது.

பொருள் : 20

சத்தியமங்கலம் நகராட்சி பகுதியில் உள்ள குப்பை கிடங்கில் சுற்றுப்புற காற்று மாசு, நிலத்தடி நீர் மாசு தொடர்பான பகுப்பாய்வு தமிழ்நாடு மாசு கட்டுபாடு வாரியத்தின் மூலம் செயல்படுத்தப்பட வேண்டும் என திடக்கழிவு மேலாண்மை வழிக்காட்டில் தெரிவிக்கப்பட்டது. இதனை தொடர்ந்து தமிழ்நாடு மாசு கட்டுபாடு வாரியம் பெருந்துறை மூலம் பரிசோதனைகள் மேற்கொள்ளும் பொருட்டு கேட்பு தொகையாக ரூ.19200-/- யை செலுத்துமாறு கோரப்பட்டது.பெறப்பட்ட கேட்பு பட்டியல் நகர் மன்றத்தின் பார்வைக்கு வைக்கப்படுகிறது. மேற்கண்ட செலவினம் நகராட்சியின் வருவாய் நிதியில் மேற்கொள்ள மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

அலுவலக குறிப்பு:-

1)மன்றம் அனுமதிக்கலாம்.

2இச்செலவினம் நகராட்சியின் வருவாய் நிதியில் மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம், 2020-2021 ஆம் ஆண்டு வரவு-செலவு திட்டத்தில் சேர்த்து கொள்ளலாம்.

தீர்மானம் எண் : 354 அனுமதிக்கப்பட்டது.

பொருள் : 21

சத்தியமங்கலம் நகராட்சி பகுதிக்கு உட்பட்ட வார்டு எண். 1 தனவாசி காலணியில் அதிக அளவில் மக்கட் தொகை பெருகி வருவதால் குடிநீர் தட்டுபாடு ஏற்பட்டுள்ளது. இப்பகுதியில் குடிநீர் தட்டுபாட்டை தவிர்க்கும் பொருட்டு புதிதாக போர்வெல் அமைத்து தண்ணீர் வசதிகள் செய்து தருமாறு முன்னால் வார்டு உறுப்பினர் மற்றும் ஊர் பொதுமக்கள் கோரிக்கை விடுத்துள்ளார்கள். எனவே, குடிநீர் அவசர அவசியம் கருதி வார்டு எண்.1 தனவாசி காலணிகளில் புதிதாக ஆழ்குழாய் கிணறு அமைத்து மின் மோட்டார் வசதிகள் செய்ய உத்தேச செலவின தொகை ரூ.2.00 இலட்சம் ஆகும். இச்செலவினம் நகராட்சியின் குடிநீர் நிதியில் மேற்கொள்ள மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

அலுவலக குறிப்பு: -

1) மன்றம் அனுமதிக்கலாம்.
2) இச்செலவினம் நகராட்சியின் குடிநீர் நிதியில் மேற்கொள்ளலாம்,2020-2021 ஆம் ஆண்டு வரவு-செலவு திட்டத்தில் சேர்த்துக்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம்.

(ந. க. எண்.100/2016/இ1)

தீர்மானம் எண் : 355 அனுமதிக்கப்பட்டது.

பொருள் : 22

சத்தியமங்கலம் நகராட்சியின் 2019-2020-ஆம் ஆண்டிற்கான நிர்வாக அறிக்கை மன்றத்தின் பார்வைக்கும் பதிவிற்கும் வைக்கப்படுகிறது.

அலுவலகக் குறிப்பு: மன்றம் பார்வையிட்டு பதிவு செய்யலாம்.

தீர்மானம் எண் : 356 அனுமதிக்கப்பட்டது.

தனிஅலுவலர் மற்றும் ஆணையாளர்
சத்தியமங்கலம் நகராட்சி.